ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

दुर्वृत्तसङ्गतिरनर्थपरम्पराया हेतुस्सतां भवति किं वचनीयमेतत् ।
लङ्केश्वरोहरतिदाशरथेः कळत्रं प्राप्नोतिबन्धमथ दक्षिणसिन्धुराजः ॥

𑌦𑍁𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌤𑌿𑌰𑌨𑌰𑍍𑌥𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌯𑌾 𑌹𑍇𑌤𑍁𑌸𑍍𑌸𑌤𑌾𑌂
𑌭𑌵𑌤𑌿 𑌕𑌿𑌂 𑌵𑌚𑌨𑍀𑌯𑌮𑍇𑌤𑌤𑍍 । 𑌲𑌙𑍍𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑍋𑌹𑌰𑌤𑌿𑌦𑌾𑌶𑌰𑌥𑍇𑌃
𑌕𑌳𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌬𑌨𑍍𑌧𑌮𑌥 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌰𑌾𑌜𑌃 ।

மஹான்களுக்குக் கெட்ட நடத்தையுடையவர்களுடையஸ்நேகமானது துக்கபரம்பரைக்குக் காரணமாகின்றது. என்கிற இதைச் சொல்லவும் வேண்டுமா. லோகநாதனுன ஸ்ரீ ரகுநாதனுடைய களத்திரத்தை லங்காதிபனுன ராவணன் அபஹரித்தான். அதினுல் தெற்குதிக்கில் விளங்கும் ஸமுத்திர ராஜனுக்கு பந்தம் ஏற்பட்டது. கெட்ட செய்கையையுடையவன் சிறந்த கல்வியைப் பெற்றிருந்தாலும் அவனை விலக்கவெண்டியது அவசியம்.

दुर्जनः परिहर्तव्यः विद्ययालंकृतोपिसन् ।
मणिना भूषितस्सर्पः किमसौ न भयङ्करः ॥

𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌿𑌹𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌲𑌂𑌕𑍃𑌤𑍋𑌽𑌪𑌿𑌸𑌨𑍍 ।
𑌮𑌣𑌿𑌨𑌾 𑌭𑍂𑌷𑌿𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌪𑌃 𑌕𑌿𑌮𑌸𑍌 𑌨 𑌭𑌯𑌙𑍍𑌕𑌰𑌃 ।

தீயநடத்தையுடையவன் மேன்மை பொருந்திய வித்தைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பரிஹரிக்கத் தகுந்தவனேயாவன். ஸர்ப்பமானது சிறந்த ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் எப்படி நமக்கு பயத்தை உண்டு பண்ணுகிறதோ அவ்விதமே துர்ஜனனும் நமக்கு துன்பத்தையுண்டு பண்ணுவானுகையால் அவன் ஸம்மந்தமே கூடாது. தெற்கு ஸமுத்திரமானது ஸ்ரீ பகவானுக்குத் தான் ஒருவித அபராதத்தையும் செய்யாவிட்டாலும் அபராதத்தைச் செய்த ராவணனுடைய ஸம்பந்தம் அதற்கிருந்தபடியால் ஸ்ரீ ராமரால் செய்யப்பட்ட ஸேதுபந்தத்திற்குத் தான் பாத்திரனுகும்படி நேர்ந்தது. ஆகையால் ஒரு ஸமயமும் கெட்ட நடத்தையுடையவர்களுடன் சேரக்கூடாது. சுபம்!

உபபத்திராதிபர்

காந்தியும் விதவா விவாஹமும்.

புரட்டாசி௴ 24௳ திங்கட்கிழமை வெளிவந்த மித்திரனில் 13-வது பக்கத்தில் விதவைகளின் விவாஹம் என்று தலையங்கமிட்டு எழுதப்பட்ட வியாஸத்தில் வங்காள பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் ஒருவர் விதவாவிவாஹமென்கிற இந்தக் கெட்ட காரியத்தைச் செய்யும்படி நீர் எதற்காக சிறுவர்களுக்கு உபதேசம் செய்கிறீரென்று காந்தியைக் கேட்டதற்கு அவர்கூறியிருக்கும் மறுமொழியிலுள்ள தவறான சில விஷயங்களுக்கு மறுப்புக் கூறவேண்டி ஏற்கனவே ஸமீபகாலத்தில் நம் ஆரிய தர்ம பத்திரிகையின் வாயிலாக விரிவாக எம்மால் இந்த விஷயத்தைப் பற்றி வரையப்பட்டிருந்தாலும் இதற்கும பதில் எழுதவேண்டுவது அவச்யமெனக கருதி முன் வருகிறோம்.

காந்தி அபிப்பிராயப்படுவதாவது.

வங்காள உபாத்தியாயர் இவ்வளவு கடுமையாக ஆக்ஷேபித்தும் என் அபிப்பிராயம மாறவில்லை. பிர்மசர்யமின்னதென்று அறிந்து அதையே அனுஷ்டிகக வேண்டுமென்று ஸங்கற்பம் செய்துகொண்டிருக்கும் விதவைகள் என்னுடைய புததிமதிகளைக்கேட்டுத் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். ஆனால் என்னுடைய புத்திமதிகளைக் கேட்டால் விவாகம் இன்னதென்று தெரியாதகாலத்தில் விவாகமாகிப் பிறகு விதவையாயிருக்கும் பெண்மணிகளுக்கு நல்லகாலம் பிறக்கும் அவர்கள் விஷயத்தில் விதவை என்னும் பதத்தைப் பிரயோகம் செய்வதே நியாயமானதாகாது என்பதேயாகும்.

என்னுடைய புத்திமதியைக் கேட்டால் விவாகம் இன்னதென்று தெரியாதகாலத்தில் விவாஹமாகிப் பிறகு விதவையாயிருக்கும் பெண்மணிகளுக்கு நல்லகாலம் பிறக்கும் என்கிறார்,

எவ்விதமான நல்லகாலம் பிறக்குமென்று தெரியவில்லை. சிறந்த மஹான்கள் ஆன்ம தத்வோபதேசத்தைச்செய்து இனி உனக்கு நல்லகாலம் பிறக்குமென்று சிஷ்யனுக்கு அனுக்கிரஹம் செய்வது போல் விதவைகளுக்கும் இவர் செய்யும் மறுமணமென்கிற சாஸ்திர விரோதமான இந்த உபதேசத்தால் நல்லகாலம் பிறக்கும் என்று பொருளா? அல்லது தரித்திர தசையிலிருந்து கஷ்டப் படுகிறவனுக்கு குசேலஸ்வாமிக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் அதிகமான ஐசுவர்யத்தைக் கொடுத்து நல்லகாலம் பிறந்ததுபோல் இவருபதேசமும் பூர்ணமான ஐசுவர்யத்தைக் கொடுத்து அதினால் நல்லகாலம் பிறக்கப்போகின்றதா? பெரியோர்களாலும் சாஸ்திரங்களாலும் கூடாதென்று தடுக்கப்பட்ட இந்த உபதேசத்தால் மிகவும் துச்சமான நாய், நரி, கழுதை, பன்றி என்று கூறப்பட்ட மிருகஜாதிகளால்கூட அனுஷ்டிக்கப்படும் தம்பதிகளின் சேர்க்கையாலுண்டாகும் ஆபாஸமான அற்ப விஷய சுகத்தைத் தவிர்த்து மற்றொன்றுமிருப்பதாகத் தெரியவில்லையே, இயற்கையில் காமத்திற்குள்ளாகி விவேகம் குன்றி பாபம் புண்யமென்கிற பகுத்தறிவில்லாமல் பசு, பக்ஷிகளைப்போல் விஷய சுகத்தைப் பெரிய புருஷார்த்தமாகக் கருதி தம் ஜன்மாவை வீணாக்கிக் கொள்ளும் ஜனங்களுக்கு அது மிகவும் கெட்ட காரியமென்றும் அதை அவசியம் விலக்க வேண்டுமென்றும் அதினால் ஏற்படும் தோஷங்களையும் கஷ்டங்களையும் எடுத்துக்காட்டி விஷயங்களில் வைராக்கியத்தையும் பரலோகத்திற்கு வேண்டிய ஸாதனங்களையும் பன்முறை உபதேசித்து ஜனங்களை நன்னெறியில் திருப்புவதன்றோ பெரியோர்களின் பெருமைக்கழகாகும். இவ்விதம் உபதேசிப்பதற்குத் தான் உபதேசமென்கிற பெயரும் பொருந்தும். ஆபாஸமான சிற்றின்ப சுகத்தை விதிக்கு மாறுதலாக நீ அனுபவிக்க வேண்டுமென்று உபதேசிக்கப் பெரியார் முன் வருவாரா? கேவலம் காமுகனும் அக்ஞனாயுமிருக்கும் ஒருவன் பாபம் புண்ணியம் தாம் செய்யவேண்டிய காரியம் இன்னது என்று ஒன்றையும் கவனியாமல் விஷய சுகத்தை அனுபவிப்பதே இப்பிறவிக்கு முக்கியமான பயன் என்று உபதேசிக்க முன்வருவது போல் இவரும் முன் வந்து ஸகல சாஸ்திரங்களும் இதுவரையில் நடந்து வந்த சிஷ்டாசாரங்களும் சரியல்ல. நான் சொல்வதுதான் சிறந்த உபதேசமென்று விதவாவிவாஹத்தை அவசியம் அனுஷ்டிக்க

வேண்டுமென்று ஆங்காங்கு உபதேசித்து இந்த உபதேசத்தை அநுஷ்டிப்பவர்களுக்கு நல்லகாலம் பிறக்குமென்று முடிவில் பலத்தையும் அறிவித்திருக்கிறாரே என்ன ஆச்சர்யம்! இந்த உத்தமமான உபதேசத்தைப் பெறுவதற்காகத்தானா நம் தக்ஷிணதேசத்திலுள்ள பல ஜனங்கள் வெகுகாலமாக காந்தியின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள் அந்தோ?

2 பின்னும் அவர்கள் விஷயத்தில் விதவை என்னும் பதத்தைப் பிரயோகம் செய்வதே நியாயமானதாகாது என்பதேயாகும் என்றும் பேசியிருக்கிறார்.

இங்கு இவர் கூறுவதின் கருத்து நன்கு விளங்கவில்லை. நம் முன்னோர்களான மஹர்ஷிகள் ஒரு ஸ்திரீக்கு விவாஹமான பிறகு அவளுடைய கொடிய பாபகர்மாக்களால் பதியின்காலம் சென்றுவிட்டால் அவளை விதவை என்கிற பெயரால் அழைக்க வேண்டுமென்றுதன்பதியை இழந்தவள் என்கிற காரணப்பெயரைக்கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பெயர் நியாயமானதாகாது என்கிறார் என் நியாயமாகாது? அவள் பதி மரிக்கவில்லையா மரித்த பதியை இவர் கொண்டு நிறுத்தி அவளுடன் சேர்த்துவிட்டுப் பிறகு அவளை விதவை என்று கூறுவது உசிதமில்லை என்று சொன்னால் எவரும் ஆக்ஷேபிக்க நியாயமில்லை. அவ்விதம் செய்ய இவருக்குச் சக்தியில்லாமல் உலகிலுள்ள யாராவதொரு புருஷனை சாஸ்திர விரோதமாய் ஒரு விதியிலும் அகப்படாமல் போகார்த்தமாய் நீங்களிருவரும் சேருங்கள் என்கிற மந்திரத்தைக் கூறிச்செய்ய வேண்டுமென்று இவரால் சொல்லப்பட்ட விவாஹப்படி இனி வரப்போகும் பதி இவளுக்கு இருப்பதால் இவளை விதவை என்று கூறுவது நியாயமாகாதென்று இவர் அபிப்பிராயப்படுகிறாரென்று தெரிகின்றது. இவ்விதமின்றி அவளை விவாஹமாகாதவளென்றோ பதியுடன் கூடியவளென்றோ கூற நியாயமில்லை. இயற்கையில் ஒருவருக்குக் கடவுளால் அவர் பாபத்தை அநுஸரித்து உண்டு பண்ணப்படும் அவஸ்தையை இல்லையென்று யார் எவ்விதம் சபதம் செய்தாலும் அது எப்படி மாறுதலடையும். தம் மனத்திலுள்ள கெட்ட எண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டி சாஸ்திராசாரங்களுக்கு மாறுதலாக ஒன்றை ஸ்தாபிக்க முன் வருவதால் இவர்களுக்கிருக்கும் பிடிவாதமும் கெட்ட காரியத்திலிருக்கும் ஊக்கமும் மாத்திரம் நன்கு வெளியாகி அவர்களுக்கேற்பட்டி

ருக்கும் பெருமையைக்குறைக்குமேயல்லாது அற்பமேனும் பயன் படாதென்பது திண்ணம். பதியிழந்த ஸ்திரீயை விதவை என்று கூறுவது நியாயமில்லை என்கிறாரே அவளை எவ்விதம் அழைக்கிறது. கன்னிகை என்று சொல்லுகிறதா அல்லது வேறு எந்த மாதிரிப் பெயரால் அழைக்கவேண்டுமென்று இவர் கருதுகிறார். இவர் அபிப்பிராயப்படி மறுமணம் செய்து நாலு மாதத்திற்குப் பிறகு அந்தப் பதியும் இறந்துபோனால் அப்பொழுது அவள் விதவையா அல்லது மறுமணம் செய்ய வேண்டியவளா, காந்தியின் உபதேசத்தால் நாங்கள் மறுமணம் செய்துகொண்டிருக்கிறோமென்று விதவைகள் சொல்லி தர்மராஜனிடம் என்ன கேட்டுக்கொண்டாலும் இவரும் சிபார்சு செய்தாலும் அது நடைபெறாது, அவனவனுடைய கர்மபலத்தைக்கொண்டுஏற்பட்டிருக்கும்அற்பாயுளை ஒரு க்ஷணங்கூட அதிகம் இருக்கும்படிச் செய்ய இவர்களுக்குச் சக்தியில்லை. இவ்விதமிருக்க மறுமணம் செய்வித்தாலும் அந்தப்பதியும் இவளுடைய அதிகமான பாபத்தால் ஏன் சீக்கிரம் மரிக்கக்கூடாது. அவ்விதம் ஸம்பவித்தாலும் அந்த ஸ்திரீயும் விதவையல்லவென்று தான் இவர் கூறவேண்டும். இவ்விதம் அடிக்கடி ச்ரமப்படுவதைக் காட்டிலும் ஸ்திரீகள் யாவரையும் விலைமகளைப்போல் ஒரு ஸமயமும் விதவை என்கிறபதத்தால் அழைக்கக் கூடாதென்றும் அந்தப் பதமே கிடையாதென்றும் காந்தி கூறினால் அவருக்கு ஸௌகர்யமாயிருக்குமென்று தோன்றுகிறது. காலத்தின் கொடுமையை யாரால் வெல்ல முடியும்.

3. பால்ய வைதவ்யம் என்பது ஒழிந்து போனால்தான் வைதவ்யத்திற்குள்ள கௌரவம் நிலைத்திருக்க முடியும் என்று சொல்லுகிறார்.

வைதவ்யமென்பது அவரவர்களுக்கு இஷ்டமான காலத்தில் தாங்களாக அடையக் கூடியதென்றும் இஷ்டமில்லாவிட்டால் விலக்ககூடியதென்றும் இவர் கருதுவதாகத் தெரிகிறது. இந்துக்களுடைய ஸநாதந தர்மவிஷயத்தில் இவ்வளவுமோசமாக காந்திக்குஇருக்குமென்று இதுவரையில் ஒருவரும் நினைக்கவில்லை இவருக்கேற்பட்டிருக்கும் கௌரவத்திற்கும் ஸநாதநதர்மத்திற்கு விரோதமாக இவரால் செய்யப்படும் விதவாவிவாஹம் முதலிய உபதேசங்களுக்கும் அற்பமேனும் பொருத்தமிருக்கின்றதா; இவரா இந்தமாதிரி உபதேசம் செய்ய முன் வருகிறது கஷ்டம்,

4. நான் சொன்ன புத்திமதியின் பலனாக பால்ய விதவை கள் விமோசனமடைந்து மற்றப் பெண்களும் பருவகாலம் வரும் வரையில் விவாஹம் செய்விக்கப்படாமலிருந்தால் நான் பரம திரு ப்தியடைவேன் என்றும் கூறியிருக்கிறார்.

விதவாவிவாகம் செய்துகொள்ளுங்கள் என்று கொடிய பாப த்திற்கும், கஷ்டத்திற்கும் காரணமான இவ்வித அதர்மோபதே சத்தைச் செய்திருக்கிறாரே இதுதான் சிறந்த புத்திமதியாம். இந்த புத்திமதிக்குப் பலம் அபாரமாக ஏற்படுமாம். அதாவது விதவைகளுக்கு விமோசனமாம். விமோசனம் என்கிற பதத்தி ற்கு என்ன கருத்துக் கொண்டிருக்கிறாரோ புலப்படவில்லை. விமோசனம் என்கிற இந்தப்பதத்திற்கு எப்பொழுதும் பிறப்பிறப் பென்கிற பெரிதான கஷ்டங்களுக்குள்ளாக்கி பலவிதத் துன்பங் களையளிக்கும் இந்த ஸம்ஸார பந்தத்திலிருந்தும் விடுபடுவது அதாவது உலகவாழ்க்கையிலுள்ள பற்றுதலை அறவேயொழித்து பர வைராக்கியத்துடன் மோக்ஷஸாதனமான வழியையே எப் பொழுதும் நாடியிருப்பது என்று பொருள். எனப் பல பெரியா ராலும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. இதற்குநேர் விரோதமாக விதவைகளுக்கு முன் செய்த தீவினையால் உலகிலு ள்ள ஆபாஸமான விஷய சுகத்தை அனுபவிக்க முடியாவிட்டா லும் தங்களுக்குச் சாஸ்திரங்களில் ஸ்வதர்மமாகக் கூறப்பட்ட பிரம்மசர்யத்தை அனுஷ்டித்தால் உத்தமமான மோக்ஷசுகத்தை அளிக்கிறேன் என்று ஸ்ரீ பகவான் தம்முடைய ஆக்ஞாரூபங்க ளான சுருதிஸ்மிருதிகளால் சொல்லியிருப்பதைச் சற்றும் கவனி யாமல் அதிகமான பந்தத்திற்கும், கஷ்டங்களுக்கும், பாபத்திற் கும் காரணமான வேறு பதியை நீ மணம் புரிந்துகொள் என்கிற இந்த உபதேசத்தால் அவர்கள் விமோசனம் அடையப்போகிறார் களாம். இந்தப் பதத்தின் பொருளுக்கும் 'அந்தக் காரியத்திற் கும் அற்பமாகிலும் ஸம்பந்தமிருக்கின்றதா பாருங்கள்? அந்த விமோசனத்திற்கு இவர் தவறான கருத்தைக் கொண்டு எழுதினா லும் அதற்கேற்படும் மற்றொரு பொருளை கவனித்தால் அது இந்த இடத்திற்கு மிகவும் பொருத்தமாயிருக்கும். அதாவது விமோசனம் என்கிற இந்தப்பதம் வடமொழியிலுள்ளது. அதில் வி-மோசனம் என்று இரண்டு பதங்களிருக்கின்றன. அதற்கு

விகதம் ச தத் மோசனம் என்கிற வியுத்பத்தியால் பந்தத்திலிருந்தும் ஒரு ஸமயமும் விடுபடுகிறதில்லை, விதவை மறுமணம் செய்துகொண்டாளேயானால் அவளுக்கு இவ்வுலகத்தில் விசேஷ நிர்பந்தமும், பரலோகத்தில் அதிகமான நரக துக்கங்களும் ஏற்பட்டு எப்பொழுதும் அவள் பாபமென்னும் பந்தத்தில கட்டுப்பட்டவளாகயிருந்து பல துக்கங்களை அனுபவிக்கிறாள் என்று சொல்லலாம். இவர் செய்யும் உபதேசத்திற்கு இந்த பலம்தான் ஏற்படும், இந்த பலத்தில் விருப்பமுள்ளவர்களுக்குத்தான் இவர் உபதேசம் உபயோகப்படும். மைற்றவர்களுக்கு இது அற்பம் கூட உபயோகமில்லை எனபது நிச்சயம்.

இங்கு நான் பரம திருப்தியடைவேன் என்றும் சொல்லுகிறார்.

இவர் அபிப்பிராயப்படி சாஸ்திர விரோதமான கெட்டகாரியங்களைச் செய்தால் இவருக்குத் திருப்தி. செய்யாவிட்டால் அதிருப்தி என்று வாசகமாகச் சொல்லாவிட்டாலும் இதிலிருந்து அதுவும் கிடைக்கின்றது. உலகிலுள்ள ஜனங்கள் நம்முடைய திருப்தியை எதிர்பார்ப்பது உசிதமா ? ஸ்ரீ பரமேசுவருடைய திருப்தியை எதிர்பார்ப்பது உசிதமா ? என்பதை இவர் ஏன் கவனிக்காமல் இந்த வார்த்தை சொல்லியிருக்கிறாரோ தெரியவில்லை. இவருக்கு திருப்தியுண்டானல் இந்தமாதிரியான கெட்ட காரியங்களைச் செய்யும்படி ஏவவும் பொருளால் அற்ப உபகாரம் செய்யவும் மாத்திரம் முடியுமேயல்லாமல் வேறு என்ன செய்ய ஸாத்தியப்படும். அவ்விதம் எதையும் செய்ய இவருக்குச் சக்தியிருப்பின் தற்காலம் கதற்நிதிக்கென்று பணம் வசூலிக்க ஆங்காங்கு ஸஞ்சாரம் செய்யவேண்டிய அவசியமேற்படாது. சுருதிஸ்மிருதியை அனுஸரித்து நடந்தால் ஈசுவரானுக்கிரஹத்தைப் பெற்று இவ்வுலகிலோ, பரலோகத்திலோ எதை விரும்பினுலும் மோக்ஷமென்று சொல்லப்பட்ட பரம புருஷார்த்தத்தையும் அடைகிறான். ஆகையால் பரமேசுவரன் திருப்தியைப்பெற வேண்டியது முக்கியமேயல்லாமல் இவருடைய திருப்தி நமக்கு அவசியமில்லை. நம்முடைய திருப்தியாலோ, அதிருப்தியாலோ, ஜனங்களுக்கேற்படும் ஸுகதுக்கங்கள் இன்னதென்று கவனியாமல் தம் திருப்தியால் பெருத்தலாபம் ஜனங்களுக்கேற்படுமென்று இவராக கௌரவத்தை ஆரோபித்துக்கொண்டு இவ்விதம் சொல்

லுகிறார். உண்மையில் இவருக்கு அதிருப்தியான விதவாவிவாஹம் செய்யாமலிருப்பது, தீண்டாமையை அனுஷ்டிப்பது முதலிய கார்யங்களை இதுவரையில் அனுஷ்டித்ததுபோல் இனியும் அனுஷ்டித்தால் தான் நமக்கு க்ஷேமமுண்டாகும். இவர் பேச்சைக் கேட்டு ஸ்வதர்மத்தை விட்டு கெட்ட கர்மாவைச் செய்து நரகத்திற்கு ஆளாகக் கூடாது. இவர் கூறுவது உபயோகமில்லாத வார்த்தையாகும்.

5. மேலும் மறுபிறப்பு அல்லது மோக்ஷத்திற்கு விருத்தமான விவாஹக் கொள்கை எனக்கிருந்துவரவில்லை என்கிறார்,

இவர் கூறும் விதவாவிவாஹம் மோக்ஷத்திற்கு ஏன் விருத்தமாகாது. தாழ்ந்ததான மறுஜன்மாவையும் ஏன் கொடுக்காது. மோக்ஷத்தையும் அதற்குற்ற ஸாதனங்களையும் இவர் நேரில் கண்டவரல்ல. பின்னை சுருதி அதைப் பின்பற்றும் ஸ்மிருதிகள் இவைகள் மூலம்தான் அறிய வேண்டும். ஸமயம் நேர்ந்து பிறர் கேள்வி கேட்கும்போது நான் சாஸ்திரத்தைக் கொண்டு சொல்லவில்லை. என்னிஷ்டம் சொல்லுகிறேனென்று தாறுமாறாக பதில் உரைத்தபோதிலும் மறுபிறப்பு மோக்ஷம் என்கிற விஷயங்களைப் பற்றிப்பேசுங்கால் சாஸ்திரங்களைச்சரணாகதியாக அடைந்தாலொழிய வேறு கதியில்லை. சாஸ்திரங்களால் மோக்ஷப் பிராப்த்திக்கும் மேலான ஜன்மாவை பெறுவதற்கும் விதவாவிவாஹம் முதலிய காரியங்கள் இடையூறாகும் என்று ஸ்பஷ்டமாய் போதிக்கப்படும்போது இவர் விருத்தமில்லையென்று நம்பிக்கை செய்து கொடுத்தாலும் அது அற்பமேனும் பயன்படமாட்டாதென்பதை நாம் தெரிவிக்க வேண்டியது அவசியமில்லை. ஆகையால் விருத்தமான கொள்கை எனக்கு வரவில்லை என்று காந்தி கூறுவது தவறேயாகும்

6. மறுபடியும் தாழ்ந்த வகுப்பினர் என்று நாம் அழைக்கும் கோடிக் கணக்கான இந்து ஸமூஹத்தினிடையே விதவா விவாஹவிலக்கு இருந்து வரவில்லை என்கிறார்.

இவர் மாத்திரம் நிலையில்லாமல் ஒரு ஸமயம் சாஸ்திரங்களில் எனக்கு நம்பிக்கையுண்டென்றும் மறுஸமயம் சாஸ்திரங்களை நான் ஆதாரமாகக் கொள்ளவில்லை என்றும் தோன்றியபடிவியவஸ்தையில்லாமல் பேசுகிறாரேயல்லாமல் ஆஸ்திகர்களான இந்துக்கள்

இந்தமாதிரி விஷயங்களில் சாஸ்திரப்ரமாணங்களைவிட்டுத் தோன்றியபடி ஒருஸமயமும் பேச முன்வரமாட்டார்கள். விதவாவிவாஹம் கூடாதென்று சாஸ்திரங்களில் மூவர்ணத்தோர்களுக்கும் அதிலும் முக்கியமாய் ப்ராமணர்களுக்கும் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றதேயல்லாமல் நான்காவது வருணத்தார்களுக்கு அவ்வளவு நிர்பந்தமில்லை. ஆகையால் அந்த வர்ணத்தாரில் சில உட்பிரிவுள்ளஜனங்கள் விதவாவிவாஹத்தை அனுஷ்டானத்தில் வைத்துக்கொண்டிருந்தாலும் அது அவர்களுக்கு தோஷத்தின் பொருட்டாகாது. இதை த்ருஷ்டாந்தமாகச்காட்டிச் செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டவர்களையும் செய்யும்படி தூண்டுவது அறிஞர்களின் செய்கையல்ல. இவர்களும் விதவாவிவாஹம் செய்யாமலிருப்பின் மிகவும் சிரேஷ்டமே அவர்களுக்குச் செய்யும்படி விதியில்லை. தற்காலம் சில ஜாதியாரிடமிருக்கும் இந்த வழக்கத்தைக்கூட இனி கூடாதென்று நிறுத்துவதற்குவேண்டிய முயற்சி பலமாக நடக்கிறதாகவும் கேள்விப்படுகிறோம். ஆகையால் இதுவும் சரியல்ல.

7. மனைவியையிழந்தபெரியவர்கள் விவாகம் செய்துகொள்வது பாதகமில்லையெனில் பெண் விதவைகள் புனர் விவாகம்செய்து கொள்வது எவ்விதம். ஹிந்துமதக் கோட்பாடுகளுக்கு விருத்தமானதாகிவிடும். என்றும் சொல்லியிருக்கிறார்.

ஹிந்துமதக்கொள்கைகளையும் விவாகமென்னும் கர்மாவையும் பற்றி இவ்விதமென்று ஒன்றுமறியாத தேசாந்திரத்திலுள்ளவர்கள் இக்கேள்வியைக் கேட்கவேண்டும். இவரும் ஹிந்துவென்கிற பொருளில்லாத பெயரை மாத்திரம் வகித்திருந்தாலும் மேல் நாட்டு வாஸனையே இவரிடம் அதிகமாக ஏறியிருப்பதால் அதை அனுஸரித்தே இக்கேள்வியையும் கேட்டிருக்கிறார்.

ஹிந்து ஜனங்கள் விவாகமென்னும் இக்கர்மாவை சாஸ்திரங்களை ஆதாரமாகக்கொண்டு அவைகளில்கூறப்பட்ட நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்துகிறார்களேயல்லாமல் தங்களிஷ்டம் போல் செய்துகொள்ளும் காரியமல்ல. சாஸ்திரங்கள் புருஷர்களிருக்க வேண்டிய நிலைமையைப் பற்றிக் கூறுமிடங்களில் अनाश्रमी नतिष्ठेत (அநாச்ரமீ நதிஷ்டேத) ஒருவிதஆச்ரமத்திலும் ஸம்பந்தப்படாமல் நீ இருக்கக்கூடாது, என்று கூறுகின்றன. ஒருவனுக்கு பால்யபருவத்தில் அவன் பத்நீ மரித்துவிட்டால்

அவன் உடனே ஸந்நியாஸாசிரமத்தைப் பெறவேண்டியது நியாயம். அதற்கு வேண்டிய ஸாதனங்களான வைராக்யம் முதலானவைகள் இவனிடமில்லாவிடில் அவன் அந்த ஆச்ரமத்திற்கு அருகனுகமாட்டான். மறுபடி விவாகம் செய்யாமலிருந்தால் இவனுக்கு ஒரு ஆச்ரமமும் நிலைக்கவில்லை. பத்நீ இல்லாதபடியால் கிருஹஸ்தன் என்று சொல்லமுடியாது. முதலாவதான பிர்மசர்யத்திலிருந்தும் கிரஹஸ்தாச்ரமத்திற்கு வந்துவிட்டால், மறுபடியும் பத்நீ போனவுடன் பிர்மசாரியாகவும் ஆகமுடியாது. மேலாச்ரமத்திற்குச் செல்வதற்கும் அதிகாரியாக இல்லை. இந்நிலையில் இருப்பவனுக்கு சாஸ்திரங்கள் மறுமணத்தை விதிகின்றன. பத்நீ இருந்தாலும் சிலருக்கு மறுவிவாகம் செய்யலாமென்று விதியுண்டு. யஜுர்வேதம் ஆருவது காண்டத்திலும் மனுஸ்மிருதி முதலிய பல கிரந்தங்களிலும் இதற்கு ஆதாரமிருக்கின்றன. இதைக்கொண்டுதான் தசரதசக்ரவர்த்தி 2, 3 ஸ்திரீகளை மணந்திருக்கிறார். யாக்ஞவல்க்யர் என்கிற மகரிஷி 2 ஸ்திரீகளை விவாஹம் செய்துகொண்டிருக்கிறார். இவ்விதம் பலருண்டு. இக்காலத்திலும் சாஸ்திர ஆதாரத்தைக்கொண்டு சிலர் மறுபடியும் விவாகம் செய்துகொள்ளுகிறார்களேயல்லாமல் ஒருவிதமுமில்லாமல் தங்களிஷ்டம். செய்துகொள்கிறோமென்று செய்துகொள்ளவில்லை. மேலும் சாஸ்திரங்களில் பதியை இழந்த விதவைஸ்திரீகளுக்கு மறுமணம் கூடாதென்று தடுத்து அவள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்களை முறையே விதவாதர்மமென்று கூறியிருப்பது போல் பத்நியையிழந்த புருஷன் மறுமணம் செய்துகொள்ளக்கூடாதென்றும் அவன் அனுஷ்டிக்கவேண்டிய அபத்நீகன் தர்மமென்று ஒன்றும் வேருகக்கூறியிருப்பதாகத் தெரியவில்லை. ஸ்திரீகளும் மறுமணத்தை அங்கீகரித்தால் அதினல் பல கெடுதல்கள் நேருமென்றே சாஸ்திரங்களின் கருத்து. அவையாவன:— ஸ்திரீயானவள் எந்த புருஷனுக்கு அவள் பத்நீ ஆகிருளோ அவனுடைய கோத்திரம் ஸூத்திரம்தான் இவளுக்கும் இவளுக்குண்டாகும் குழந்தைகளுக்குமென்று தீர்மானம், கௌண்டிநயகோத்திரத்தைச் சேர்ந்த ஒரு புருஷனுக்கு விவாகிதையான ஒரு ஸ்திரீக்கு புத்திரன் ஏற்பட்டால் அவனுக்கும் அதே கோத்திரம்தான். அவள் பதியின் காலமாய்விட்டால் மறுபடியும் அவளை எந்த கோத்ரமாகவைத்து யார் தானம் செய்துகொடுக்கிறது. முதல்விவாகத்தில்

பிதாவின் கோத்திரத்தைச்சொல்லி தானம் செய்துகொடுத்துப் பிறகு பதியின் கோத்திரத்தைப் பெற்றுவிட்டாள். இனி இவளை தானம் செய்துகொடுக்கும் அதிகாரம் யாருக்குண்டு. எந்த கோத்திரமாகச் செய்கிறது. யாதொரு விதியுமில்லாமல் மேனுட்டுவிவாகமாகத்தான் நடத்தவேண்டும். அன்றியும் முதல் விவாகத்தில் ஒருபுத்திரன் ஏற்பட்டபிறகு மறுமணம் செய்து கொண்டால் இவளுக்கு முதல் பதி வஸிஷ்டகோத்திரம் 2-வது ஆத்ரேயகோத்திரம், 2-வது பதியினிடம் கொஞ்சகாலமிருந்து இவள் மரித்தால் முதல் பதியிடமுண்டான புத்திரன் இவளுக்கு உத்திரக்கிரியை செய்கிறதா? இல்லையா? செயயத்தான் வேண்டும். செய்தால் இவளைஎந்தக்கோத்திரமாக வைத்துச்செய்கிறது. நாமகோத்திரமில்லாமல் மரித்தவர்களுக்குக் கிரியை செய்தால் உபயோகமில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பின்னும் போகத்திற்காக சாஸ்திரவிதியில்லாமல் கிரஹிக்கப்பட்டபதியினிடம் ஒரு புத்திரன் உண்டானுல் அவனுக்கு உபநயனம் செய்கிறதா? இல்லையா? அவன் விதிப்படி விவாஹமாகாத ஸ்திரீயினிடம் உண்டானவனுகையால் சங்கை ஏற்படுகின்றது. அவனைப் பிராமணனென்று அழைக்கவும் சாஸ்திரங்கள் இடங்கொடுக்கவில்லை. இவ்விதம் பலவிதமான சங்கடங்கள் நேருமென்றுதான் நம் சாஸ்திரங்களில் விதவாவிவாகம் கூடாதென்று கண்டிக்கப்பட்டிருக்கின்றது. மற்றொரு விசேஷமும் இங்கு கவனிக்கவேண்டியதுண்டு. ஸ்திரீகளின் விவாகத்தை பூதானம், கோதானம், ஸ்வர்ணதானம் என்பதுபோல் கன்னிகாதானம் என்று இதையும் ஒரு சிறந்த தானமாகக் கூறுகிறார்கள். தானமென்கிற இந்தக்கர்மாவானது இருவர்களைக்கொண்டு நடைபெறவேண்டும். ஒருவர் கொடுக்கிறவர்; மற்றொருவர் வாங்குகிறவர். இவ்விருவரில்லாமல் நடக்காது. இதில் ஒருவர் தன்னுடையதான ஒரு பொருளைப் பிறருக்குத் தானமாகக் கொடுத்தார் என்றால் அந்த ஸொத்தில் தனக்கிருக்கும் பாத்தியத்தை இழந்துவிட்டு அதை தானம் வாங்கியவருக்குக் கொடுத்துவிட்டார் என்று பொருள். அவ்விதமே உலகிலும் நடைபெறுகின்றது. சில தானத்தில் அனுபவபாத்தியம் மாத்திரமேற்படுமேயன்றி தானத்தைப்பெற்றவர்கள் அதை பிறருக்குக் கிரயத்திற்கோ, வேறுவிதமாகவோ. கொடுக்கக் கூடாது. இவ்விதமும் ராஜாக்களால் விடப்பட்ட சில மான்யங்

களை அந்தக் குடும்பபரம்பரையிலேயே அனுபவித்துவருகிறார்கள் கன்யாதானமென்பது இரண்டாவதாகக் கூறப்பட்ட தானத்தில் சேர்ந்தது. ஒரு கன்னிகையை ஒரு பதிக்கு விவாகம்செய்து முறைப்படி தானம்செய்து கொடுத்த பிதா தன் பாத்தியதையை இழந்துவிட்டான். கன்னிகை என்கிற இந்த ஸொத்தை தானம் வாங்கினவன் அதைஅநுபவிப்பதைத்தவிர அவளை எந்தக்காரண த்தினாலும் பிறருக்குக்கொடுக்கக்கூடாது. அவளாகவும்மற்றொரு புருஷனை அடைய அதிகாரமில்லை. அந்தப்புருஷன், மரித்தாலும் அவளுக்கு விதிக்கப்பட்ட விதவாதர்மத்தில் இருந்து வரவேண் டுமே தவிர வேறொருவனை மனதாற்கூடக் கருதக்கூடாது. புரு ஷன் தானம் வாங்கினவன், அவனுக்கு மறு தானம் வாங்கக்கூடா தென்று நிஷேதமில்லை. ஒருவர் ஒரு தினத்தில் பல தானங்களை வாங்கினாலும் அதைத் தவறென்று எப்படிக் கூறமுடியாதோ, அவ்விதம் முந்தி ஒரு கன்னிகாதானம் வாங்கின புருஷன் அவளி ருந்தாலும் இல்லாவிட்டாலும் மறு கன்னிகாதானம் வாங்கக் கூடாதென்று அவனுக்கு நிஷேதமில்லை. ஆகையால் புருஷனைத் திருஷ்டாந்தமாகக்காட்டி அவ்விதம் ஸ்திரீகளும் ஏன் மறுமணம் செய்துகொள்ளக் கூடாதென்று காந்தி சொல்வது மிகவும் தவறேயாகும்.

8. ஹிந்துமதத்தில் வைதவ்யம்ஒருபெருமையாகக் கருதப் படுகிறதாயினும் வேதகாலத்தில் விதவைகள் புனர்விவாகம் செ ய்து கொள்ளக் கூடாதென்கிற நியதி இருந்ததாக எனக்குத் தெ ரியவில்லை என்றும் பேசியிருக்கிறார்.

இங்கு வேதகாலத்தில் என்று ஒரு வார்த்தை பேசியிருக்கி றார். உண்மை ஹிந்துவாயும் ஆஸ்திகனாயுமிருக்கும் எவனும் வேதத்திற்கு இந்தக் காலத்திலேற்பட்டதென்று ஒரு காலத் தைக் குறிப்பிட முன் வரமாட்டான். ஈசுவரனை எப்படி அனாதி யென்று கூறுகிறார்களோ அவ்விதமே வேதத்தையும் அனாதியா கத்தான் கூறுவார்கள். இக்கருத்தை பிர்மமீமாம்ஸா சாஸ்திரத் தில் 2-வது அதிகரணத்தால் நன்கு வெளியிட்டிருக்கிறார். தம்மை ஹிந்து மதத்திலிருப்பவரென்றும் அந்த மதத்தில் தன க்கு விசேஷமான அபிமானம் உண்டென்றும் இவர் பல ஸமயங்க ளில் வெளியிட்டிருப்பது உண்மையாயிருந்தால் வேதகாலமெ ன்று கூற முன் வருவாரா. இதினால் வியவகார ஸ்மயங்களில்

ஜனங்களை வஞ்சிக்கவேண்டி மாத்திரம் ஹிந்துமதமென்றும் அதில் பற்றுதலுண்டென்றும் சொல்வதைத் தவிர்த்து உண்மையில் இல்லையென்று நன்கு வெளியாகின்றது.

இவர் கும்பகோணம் வந்திருக்கும் காலத்தில் சில பண்டிதர்கள் ஆக்ஷேபிக்கும் ஸமயத்தில் தமக்கு சுருதி ஸ்மிருதிகளில் ஞானமில்லை என்றும் தம்மனதில் தோன்றியதைச் சொல்லுகிறேன் என்று சொல்லிய இவர் இப்பொழுதுவேதகாலத்திலென்று வேதசாஸ்திர ஞானம் தமக்கிருப்பதாக எவ்விதம் வெளியிடமுன் வந்தாரோ தெரியவில்லை. வேதகாலத்தில் விதவைகளுக்கும் புனர் விவாகம்செய்துகொள்ளக்கூடாதென்கிறநியதியிருந்ததாகத் தெரியவில்லை என்கிறார். இதை எப்படி இவர் கண்டு பிடித்தார் தம்முடைய ஞான திருஷ்டியாலா? அல்லது வேதங்களில் இவருக்கிருக்கும் அதிகமான பாண்டியத்தியத்தாலா? மேலும் எனக்குத் தெரியவில்லை என்று பொதுவாக ஏன் சொல்ல வேண்டும். பிரமாண வசனங்களையல்லவோ முந்தி நிரூபிக்க வேண்டும். பிரமாண வசனங்கள் தமக்குத் தெரியாதென்றால் வேதமென்றும் கீதையென்றும் சாஸ்திரங்களின் பெயரை மாத்திரம் சொல்லி எதற்காக ஜனங்களை வஞ்சிக்கவேண்டும். வேதார்த்தங்களையே நாங்கள் வெளியிடுகிறோமென்று பிரதிக்ஞை செய்துகொண்டு எழுதப்பட்ட ஸ்மிருதிகளில் மனு; யாக்ஞவல்கியர், பாராசரர் முதலான மஹரிஷிகளால் விதவைகளுக்கு மறுமணம் கூடாதென்றும் அவர்கள் பிர்ம்மசர்ய விருதத்தை அனுஷ்டிக்க வெண்டுமென்றும் பரபுருஷனுடைய பெயரைக் கூட ஸ்மரிக்கக் கூடாதென்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார்களே. • அம்மகான்களும் இவரைப்போல் வர்ணாசிரம தர்மங்களை அடியோடு போக்கி உலகத்தைக் கெடுக்க வேண்டியா அதர்மத்தை தர்மமாக உபதேசித்திருக்கிறார்கள். அவர்கள் சிறந்த தபோபலத்தால் முக்காலத்திலுமுள்ள விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கறிந்தவர்களில்லையா உலக க்ஷேமார்த்தமாய்ப் பாடுபடுகிறோமென்று சில வேஷதாரிகள் செய்யும் உபன்யாசங்களைப் போலவா. அம்மஹான்களும் தர்மதத்துவங்களை வெளியிட்டிருக்கிறார்கள். உண்மையில் லோகக்ஷேமத்திற்காக அவதரித்த ஈசுவராம்ச பூதர்களான கருணாமூர்த்திகளல்லவா. உண்மையான தர்மத்தைவிட்டு

அற்பமாவது மாறுதலாக அவர்கள் மனதில் தோன்றுமா இக் கருத்தையே

धर्मशास्त्ररथारूढा वेदखड्गधराद्विजाः ।
लीलार्थमपियं ब्रूयुः सधर्मः परमः स्मृतः ॥

𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌰𑌥𑌾𑌰𑍂𑌢𑌾𑌵𑍇𑌦𑌖𑌡𑍍𑌗𑌧𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ।
𑌲𑍀𑌲𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿𑌯𑌂 𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃 𑌸𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑌰𑌮𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।

தர்மசாஸ்திரமென்கிற ரதத்திலேறிக்கொண்டு வேதங்களென்கிற கத்தியைக் கையிலேந்திய த்விஜர்கள் எதைச் சொல்லுகிறார்களோ, அது வேடிக்கையாக விளையாட்டாகச் சொல்லப்பட்டிருந்தாலும், அதை மிகவும் சிறந்த தர்மமாகக் கொள்ளவேண்டுமென்று போதாயன மஹரிஷி கூறியிருக்கிறார். இவ்விதம் பல மஹான்களாலும் வேதத்தின் அபிப்ராயத்தையே ஸ்மிருதி என்கிற பெயரால் வெளியிட்டிருப்பதில் விதவாவிவாகம் கூடாதென்று சொல்லியிருக்க அதற்கு மாறுதலாக வேதகாலத்தில் விதவாவிவாஹம் செய்யக்கூடாதென்கிற நியதி இருந்ததாகத் தெரியவில்லை, என்று இவர் கூறும் வசனத்திற்கு எவ்வளவு மதிப்புண்டென்பதை நாம் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. இவ்விதம் முன்னுக்குப்பின் முறணாக இன்னும் பல வார்த்தைகள் காந்தி பேசியிருக்கிறார். இதுவரையில் எம்மால் கூறப்பட்ட ஸமாதானங்களைக் கொண்டே அவைகளைத் தவறென்று நன்குணர்ந்துகொள்ளலாமாகையால் அவைகளை வேறாக எடுத்துக் கண்டிக்காமல் விடுத்தனம், சாஸ்திரீயமான ஸநாதன தர்மவிஷயங்களில் சாஸ்திரங்களுக்கும் சிஷ்டாசாரங்களுக்கும் விரோதமாக ஒருவித ஸித்தாந்தத்தை நம் காந்தி வெளியிட்டு அதை உலகிலும் நடைபெறச்செய்ய வேண்டுமென்று எவ்வளவு பிரயாசை இவர் எடுத்துக்கொண்டு எழுதினாலும், தற்காலத்திலும் சில ஆஸ்திகர்களிருப்பதால் அதற்கு மறுப்பெழுதாமல் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். ஒருவித பலமுமில்லாமல் தம் புத்தியில் தோன்றியதையே பெரிய தர்மோபதேசமாகக் கருதி அதர்மத்தை தைர்யமாய் உபதேசிக்க இவர் முன்வரும்போது ச்ருதி ஸ்மிருதி என்னும் சிறந்த பிரமாண பலத்தை அடைந்திருக்கும் ஆஸ்திகர்கள் உண்மையான தர்மத்தைப் போதிக்க எப்படி முன்வராமலிருப்பார்கள் என்பதை இவர் சற்று கவனித்திருப்பாராகில் இந்த அதர்மோப

தேசத்தில் இவ்வளவு சிரமத்தை வகிக்க நியாயமில்லை. இவரிடம் அபிமானமுள்ள பல ஜனங்களுக்கு இவரிடம் அப்ரியமும் ஏற்பட்டிருக்காது. ஆஸ்திகர்கள் மனமும் புண்படாது. இதுவரையில் ஸநாதனதர்மவிஷயத்தில் முன்னுக்குப்பின் முறணாகவும் சாஸ்திர விரோதமாகவும் உபன்யஸித்து லோகத்திற்குச்செய்த அபகாரத்தை, இம்மட்டோடு போதுமென்று நிறுத்திக்கொண்டு இனியாகிலும் ஆரம்பத்தில் தாம் எந்த உத்தேசத்துடன் ஜனங்களுக்குபகாரம்செய்ய முன்வந்தோமென்பதைச் சற்று நிதானமாய்ப் பிடிவாதத்தைவிட்டு கவனித்துப்பார்த்து அதே துறையிலிருந்து கொண்டு தமக்கு ஸம்பந்தமில்லாததும் தெரியாததுமான சாஸ்திரவழிகளில் இறங்கித்தாமும் கலங்கி பிறரையும் கஷ்டப்படுத்தாமல் வேலை செய்தாரேயானால் ஒருஸமயம் நன்மை ஏற்பட்டாலு மேற்படலாமாகையால் அதே வழியில் இவர் இருக்கவேண்டுமென்று இவரிடம் எனக்கிருக்கும் பிரியத்தால் இவருடைய வாக்கிற்கும் நடத்தைக்கும் உலகிலுள்ளவர்கள் விசேஷ கௌரவத்தைக் கொடுக்கவேண்டுமென்று கருதி மீண்டும் நான் அறிவித்துக் கொள்ளுகிறேன். சுபம்.

உபபத்திராதிபர்.

இதுவும்காலவித்தியாஸமா.

(571-வது பக்கத்தொடர்ச்சி)

காலத்திற்குத் தக்கபடி நமது மதத்தைப் பரவச் செய்யவேண்டுமென்றும் அதற்கு விபாக்கியானமாய் மதத்திலுள்ள முக்கிய அம்சங்களைக் குறைக்காமல் சாதாரண அம்சங்களைக் குறைத்துவிட வேண்டுமென்கிறார். இங்கு முக்கிய அம்சங்கள் எவை அவை குறைக்கப்பட வேண்டுமேயென்று அப்போது ஸபையில் ஒருவரும் கேட்கவில்லை. இதைப் பார்க்கும்போது உபனிடத்தில் ஓரிடத்திலுள்ள கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. அதைத் தெரிவிக்கிறேன்.

பிர்மதேவர்கள் அசுரர்களின் மத்தியில் ஆத்மாவை அறிய வேண்டும். அவன் ஜரையற்றவன் பாபமற்றவன் மிருத்யுவற்ற

வன் சோகமற்றவன் சாப்பாட்டாசைவற்றயன் தாகமற்றவன் ஸத்தியகாமன் ஸத்தியஸங்கல்பன் அவனை அறியவேண்டும் அவனை அறிந்தவன் ஸமஸ்த லோகங்களையுமறிவான் ஸமஸ்த காமங்களையடைவான் என்றார். உடனே அந்த ஆத்மாவை அறிவோமென்று இருதாத்தாரும் கிளம்பி விட்டார்கள். அவர்களெல்லோரையும் அடக்கிவிட்டு அவ்விரண்டு அரசர்களான இந்திரனும்விரோசனனும் கிளம்பி பிர்மாவிடம் ஸமித்துடன்போனார்கள். உடனே பிர்மா அவர்களுக்கு கண்ணில் ஒரு புருடன் தெரிகிறானே அவன்தான் ஆத்மாவென்றார். இருவரும தெரிந்துகொண்டு போனதில் விரோசனன் தேகம்தான் ஆத்மாவென்று நிச்சயித்தான். இந்திரன் ஒருபடிமேற்போனபோதிலும்ஆத்மாவினுசத்தையே அடைகிறனென்றே மயங்குகிறான், ஆகவே இருவர்களும் கோரினபலன் கிடைக்காமல் ஒழிந்தனர். அத்தன்மைபோல இக்காலத்தில் ஆங்கில நாகரீக ஆஸ்திகர்கள் யுக்தியால் தீண்டாமையென்பது சரி இல்லையென்று எண்ணிக்கொண்டு மயங்கி நிற்குமளவில் நமது கோபாலாசார் லௌகிகரும் மத சாஸ்த்ரமும் தெரிந்தவராயிற்றே அவர் யாது கூறுகிறார் என்று கவனிப்போமெனப்பல லௌகிகப் பிரபுக்கள் வந்திருக்கும்போது இவ்விதமெல்லாம்கூறினதைக்கேட்டவுடன் என்ன சொல்லிக் கொள்வார்கள். தீண்டாதவர்களே கிடையாதா நமது கன்மங்களை விட்டு விடலாமென்று ஆசாரே சொல்லிவிட்டார் என்று தான் போய் இருப்பார்களே தவிர ஆற அமர ஆலோசித்தவன் அங்கிருக்கவில்லை என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. இருக்கட்டும், இப்போது நான் நமது ஆசார் அவர்களைக் கேட்கிறேன்.

ஆசார்யரவர்களே! நமது மததில் முக்கிய அம்சம் எது? ஸாமான்ய அம்சம் எது? இப்போது நம உலகில் ஏற்பட்டிருக்கும் சங்கடம்போல் எப்போதாவது ஏற்பட்டிருக்குமா? இல்லையா? அக்காலங்களில் முக்கிய அம்சத்தை கிரஹித்துக்கொண்டு ஸாமான்ய அம்சத்தைக் கைவிட்டுத் தான் மதத்தைக் காப்பாற்ற நேர்ந்ததோ மகமதியர் ஆட்சிகாலத்திற்கூட முக்கியம், ஸாமான்யமென்று பிரித்ததாய்த் தெரியவில்லை.

(தொடரும்)

M. N. சுப்ரமணியசாஸ்திரிகள்.